விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 கார்த்திகை 22 வெள்ளிக்கிழமை (08.12.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 344

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியாவின் தலையீட்டை வலியுறுத்தி தமிழ் நாடு சட்டசபையில் தீர்மானம்!

(சென்னை)

இலங்கைப் பிரச்சினையை இந்தியா தீர்க்க வேண்டுமென வலியுறுத்தி தமிழ் நாடு சட்ட சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இலங்கைப் பிரச்சினைக்கு விரைவில் ஒரு முடிபு காண மத்திய அரசு உரிய முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கைப் பிரச்சினை குறித்து தமிழ்நாடு சட்ட சபையில், சட்ட சபை உறுப்பினர்கள் மிகுந்த கவலையுடன் உரையாற்றியதாகத் தெரிவிக்கப்பட்டது. (04 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் இடம்பெற்ற தாக்குதலுக்கு விடுதலைப்புலிகளுக்குத் தொடர்பில்லை



### இளந்திரையன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

அண்மையில் கொழும்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மீது மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதலை தாம் மேற்கொள்ளவில்லை என விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக விடுதலைப்புலிகளின் இராணுவப் பேச்சாளர் இ.இளந்திரையன் பி.பி.ஸிக்குத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

திருகோணமலையில் பாடசாலை வளாகத்தில் வீழ்ந்து வெடித்த எறிகணையில் 13 பேர் காயமடைந்துள்ளனர். இதில் 9 மாணவர்களும் 2 ஆசிரியர்களும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த எறிகணை வீச்சு விடுதலைப்புலிகளாலேயே நடத்தப்பட்டது என்று இராணுவம் குற்றஞ்சாட்டியுள்ளது. நேற்றுக் காலை எமது நிர்வாகப் பகுதியான வெருகல் பகுதியை நோக்கி இராணுவத்தி னர் படை நகர்வை மேற்கொள்ள முயற்சித்தார்கள்.

அவர்களை எமது போராளிகள் ஈச்சிலம்பற்றிலிருந்து தாக்குதலை நடத்தி படை நகர்வை முறியடித்தனர். ஆனால் இலங்கை அரசோ புலிகள் தாக்குதல் நடத்திய பின்னரே தாங்கள் தாக்குதலை நடத்துவதாக கூறி வருகின்றனர். (04 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு.வாகரையில் கடும் மோதல் ஷெல் தாக்குதலில் மூவர் உயிரிழப்பு

### ஷெல் தாக்குதல் நடத்தவில்லை என புலிகள் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாகரைப் பகுதியில் விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையில் கடும் மோதல் தொடர்ந்தும் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுத லைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வெருகல் பகுதியை நோக்கி நேற்றுக்காலை இராணுவம் பீரங்கித் தாக்குதலை நடத்தியது. அதேநேரத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வாகரையின் தென்மேற்குப் பகுதியான கட்டுமுறிவு (04 ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதத் தடைச் சட்டம் குறித்து தமிழ் மக்கள் அச்சமடைய தேவையில்லை

## வவுனியாவில் கிளைமோர் 2 இராணுவத்தினர் பலி

வவுனியா செட்டிக்குளம் பகுதியில் நேற்று முன்தினரவு இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் இரு இராணுவத்தினர் உயிரிழந்

# பயங்கரவாதத் தடைச் சட்டம் குறித்து தமிழ் மக்கள் அச்சமடைய தேவையில்லை

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



(கொழும்பு)

பேச்சுவார்த்தை நடத்த விடுதலைப்புலிகள் உண்மையாக விரும்பினால் அதற்கு அரசு தயாராகவுள்ளது. அது நேர்மையானதாகவிருக்க வேண்டும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இரவு நாட்டுமக்களுக்கு ஆற்றிய உரையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் குறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை எனத் தமிழ் மக்களுக்கு அவர் நம்பிக்கை தெரிவித்தார். இச் சட்டத்தின் மூலம் மனிதஉரிமைகள் நசுக்கப்பட எவ்வித வாய்ப்பையும் தாம் வழங்கப் போவதில்லை என்று அவர் உறுதியளித்துள்ளார்.

பயங்கரவாதத்தை ஒடுக்க மட்டுமே இந்தச் சட்டம் என்று அவர்உறுதிபடக் கூறினார். விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்கள்என அரசாங்கத்தையும் சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றிக் கொண்டு கொலைகளைப் புரிந்து வருகின்றது.

நான் பதவிக்கு வந்த சிலநாட்களிலேயே உச்சக் கட்டத்தை அடை (04 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் கிளைமோர் 2 இராணுவத்தினர் பலி

வவுனியா செட்டிக்குளம் பகுதியில் நேற்று முன்தினரவு இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் இரு இராணுவத்தினர் உயிரிழந்துள்ளனர்.

கடமையிலிருந்த இராணுவத்தினருக்கு உணவு வழங்கிக் கொண்டிருந்தவர்கள் மீதே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இவர்கள் இருவரது உடல்களும் வவுனியா வைத்தியசாலையில் நேற்று வைக்கப்பட்டிருந்தது.

இதேவேளை வவுனியா மகரம்பைக்குளம் பகுதியிலுள்ள இராணுவச் சோதனைச்சாவடி மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஒரு பொலிஸ் உத்தியோகஸ்தர் படுகாயமடைந்துள்ளார். (ச–7,9)

## கடற்படையினர் சுட்டதில் இளைஞன் உயிரிழப்பு

(கொழும்பு)

மோதரை காக்கைதீவில் நேற்று வியாழன் கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் பலியானதுடன் இன்னொருவர் காயமடைந்துள்ளார்.

நேற்றுக் காலை குறித்த பகுதியில் சென்ற சில தமிழ் இளைஞர்களைக் கடற்படையினர் தடுத்துச் சோதனையிட முயன்றபோது குறித்த இளைஞர்கள் கடற்படையினரின் துப்பாக்கியைப் பறித்து தாக்க முயன்றவேளை கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (04 ஆம் பக்கம் பார்க்க)

# போர் நிறுத்த உடன்படிக்கையின் 2:12 ஐ மாற்றியமைக்க அரசு முடிவு

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நிராகரிக்கும் போர் நிறுத்த உடன்படிக்கையின் 2:12 பிரிவை மாற்றியமைக்க அரசு முடிவெடுத்துள்ளது.

போர் நிறுத்த உடன்படிக்கையில் மாற்றம் எதுவும் செய்வதானால் செய்ய விரும்பும் பிரிவு அது குறித்து நோர்வே அனுசரணையாளர்களுக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட இரு பிரிவும் ஒத்துக் கொண்ட பிற்பாடே மாற்றத்தைச் செய்ய முடியும். ஆனால் அரசு தன்னிச்சையாக இந்த முடிபை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த சட்ட நிபுணர் குழுவைச் சேர்ந்த ஒருவர், அண்மை நிகழ்வுகளின் அடிப்படையில் பயங்கரவாதத்தை ஒடுக்கும் நோக்கில் அரசு இந்த முடிபை எடுத்துள்ளது.

பயங்கரவாத நடவடிக்கைகளை முடக்கும் நடவடிக்கைகளுக்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அமுல்படுத்துவது பற்றி மகிந்த, ரணிலுக்குத் தெரிவித்துள்ளார். ஆனால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அமுல்படுத்துவதில் தமக்கு விருப்பமில்லை எனத் தெரிவித்துள்ள ரணில், தேவையெனில் (04 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சிகள் வெற்றியளிக்க இணைத்தலைமைகளின் அழுத்தம் அவசியம்

## அமெ.தூதுவரிடம் யாழ்.ஆயர் தெரிவிப்பு



இலங்கையில் சமாதான முயற்சிகள் வெற்றியளிக்க இணைத்தலைமை நாடுகளின் பங்கு அவசியம் என யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஓ பிளேக்கிடம் விளக்கிக் கூறினார்.

அமெரிக்கத் தூதுவர் அடங்கிய குழுவுக்கும் யாழ்.ஆயருக்குமிடையே நேற்று ஆயர் இல்லத்தில் சந்திப்பொன்று இடம் பெற்றது.

இச் சந்திப்பின் நிறைவில் கருத்துத் தெரிவித்த அமெரிக்கத் தூதர்;

யாழ்.குடாநாட்டு மக்களின் அவல நிலைகள் குறித்து சர்வதேசத்திற்கு எடுத்துரைக்கும் ஒரே ஒரு குரலாக யாழ்.ஆயர் நீண்டகாலமாக செயற்பட்டு வருவதனை தாம் கேட்டு வருவதாக தெரிவித்தார்.

இச் சந்திப்பில் யாழ்.மக்களின் நிலை குறித்து யாழ்.ஆயர் விளக்கமளிக்கையில்;

கடந்த ஆகஸ்ட் மாதம் 11ஆம் திகதி ஏ-9 பாதை மூடப்பட்ட பின்னர் யாழ்.மக்கள் அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

கொலைகள், காணாமற் போதல் மற்றும் கடத்தல்கள் என்று தொடர்ந்து மனித உரிமை மீறல் இடம்பெற்று வருகின்றன.

நாட்டில் அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக ஓர்அரசியல் தீர்வே காணப்பட வேண்டும். அவ்வாறு அரசியல் தீர்வு காண்பதற்கு தடையாக உள்ள,

* பேரினவாத பௌத்த சிங்கள எண்ணம்
* விட்டுக்கொடுக்காமை
* புரிந்துணர்வின்மை
* நோர்வேயின் சமாதான முயற்சி வெற்றியளிக்காமை

போன்றவையெல்லாம் நீங்கி இணைத் தலைமை நாடுகள் தொடர்ந்தும் இலங்கையில் ஓர் அரசியல் தீர்வை ஏற்படுத்த அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

அரசாங்கம் பேச்சுவார்த்தைகளில் காணப்பட்ட தீர்மானங்களை உடனடியாக உறுதிப்படுத்தி நிறைவேற்ற வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஓர் தீர்வு திட்டத்தை முன்வைத்து தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை பெற்றுக் கொள்ள வேண்டும் என யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை வலியுறுத்தியுள்ளார். (ச-5)

## பரு.பிரதேச கால்நடைகளுக்கு தீவன விநியோகம் இடம்பெறுகிறது

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச கால்நடைகளுக்கான தீவன விநியோகம் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினூடாக இடம் பெற்று வருகின்றது.

கால்நடை வைத்திய அதிகாரியின் சிபார்சின் பேரில் இக் கால்நடைகளுக்கான தீவன விநியோகம் இடம் பெற்று வருகின்றது.

கால்நடை வளர்ப்போர், கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்துடன் தொடர்பு கொண்டு கால்நடைகளுக்கான தீவனங்களைப் பெற்றுக் கொள்ளலாமென பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி கலாநிதி சிவகுருநாதன் வசீகரன் அறிவித்துள்ளார். (ச-52)

## கரவெட்டியில் சுற்றிவளைப்பு

(யாழ்ப்பாணம்)

கரவெட்டிப் பகுதியில் நேற்று பாரிய சுற்றிவளைப்புத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சுற்றிவளைப்பின் போது அப் பகுதியில் உள்ள இளைஞர் யுவதிகளின் அடையாள அட்டைகள் பெற்றுக் கொள்ளப்பட்ட பின் கரவெட்டி பத்திரகாளி கோவிலடிக்கு அழைக்கப்பட்டு அங்கு வைத்து உரியவர்களிடம் அடையாள அட்டைகள் கையளிக்கப்பட்டன. எனினும் சிலரின் அடையாள அட்டைகள் நேற்று வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது. (எ-101)

## குழந்தைகளுக்கான இலவச பால்மா விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள 18 ஆயிரத்திற்கு மேற்பட்ட 4-5 வயது வரையிலான சகல குழந்தைகளுக்கும் அங்கர் 3+ பால்மா இலவசமாக வழங்க சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் முன்வந்துள்ளது.

இவை சுகாதார திணைக்களத்தின் தாய் சேய் நல சிகிச்சை நிலையங்கள் ஊடாக குடும்ப நல உத்தியோகத்தர்களால் விநியோகிக்கப்படும் என யாழ்.சுகாதார பிரதி மாகாணப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதற்கான பால்மா தொகுதி கொழும்பிலிருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் விமான மூலம் எடுத்துவரப்பட்டு சகல சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளுக்கும் விநியோகிக்கப்பட்டுள்ளது.

இப் பால்மா விநியோகம் எதிர்வரும் 11ஆம்திகதி தொடக்கம் 16ஆம்திகதி வரையும் இடம்பெறும். ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரியும் தமது பிரிவிலுள்ள தாய்சேய் நல சிகிச்சை நிலையங்களில் பால்மா விநியோகிக்கப்படும் திகதி, நேரம் பற்றி பகிரங்கமாக அறிவிப்பார்கள்.

குழந்தைகளின் குழந்தை வளர்ச்சிப் பதிவேட்டில் பதிவு செய்தே பால்மா விநியோகிக்கப்படும். ஒரு குழந்தைக்கு ஒரு பால்மா பக்கற் மட்டும் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## பிரதேச செயலாளர்களுக்கு வெளிநாட்டில் பயிற்சி

பிரதேச செயலாளர்களுக்கு வெளிநாடுகளில் பயிற்சி வழங்குவதற்கான நடவடிக்கைகளை பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இதன் பயனாக பின்தங்கிய பிரதேச செயலகங்களின் நிர்வாகம் செயற்பாடுகளை திறன்பட மேற்கொள்வதற்காகவும் அக்கிராமங்கள் மக்களின் பொருளாதாரம் மற்றும் வாழ்க்கைத் தரம் என்பவற்றை விருத்தியடையச் செய்வதற்குமான பயிற்சிகளைப் பெறுவதற்கென பின்தங்கிய பிரதேச செயலாளர்கள் 14 பேர் பயிற்சிக்கென தாய்லாந்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

பிரதேச செயலாளர்கள் வெளிநாட்டுப் புலமைப்பரிசில் வழங்கிய திட்டத்தின் கீழ் முதலில் பின்தங்கிய பிரதேசங்களைச் சேர்ந்த பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள் ஆகியோருக்கு புலமைப் பரிசில்களை வழங்க பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

## கியூடெக்-கரித்தாஸ் நிறுவனத்தால் உலர் உணவுக்கான உதவிகள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)




சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சில்லாலை, மாதகல், பண்டத்தரிப்பு, பிரான்பற்று, இளவாலை போன்ற இடங்களிலுள்ள வறுமை நிலையில் வாழும் மக்களுக்கு கியூடெக்-கரித்தாஸ் நிறுவனம் உலர் உணவுக்கான உதவிகளை வழங்கியுள்ளது.

மேற்குறிப்பிட்ட பகுதிகளில் வாழும் மீனவ, நலிவுற்ற குடும்பங்களில் கடந்த ஓகஸ்ட் 11ஆம் திகதிக்குப் பின் ஏற்பட்ட அனர்த்தத்தின் பின் இடம் பெயர்ந்த 1469 குடும்பங்களுக்கு பங்கீட்டு உலர் உணவுக்கான நிதியை நிவாரண உதவியாக இம் மாதம் 5ஆம், 6ஆம் திகதிகளில் கியூடெக்-கரித்தாஸ் நிறுவனம் வழங்கியுள்ளது.

இவ்வுதவித் திட்டத்தின் கீழ் எதிர்வரும் 11, 12ஆம் திகதிகளில் மானிப்பாய் ப.நோ. கூட்டுறவுச் சங்க எல்லையில் வாழும் மீனவ, நலிவுற்ற, அனர்த்தத்தின் பின் இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கான உலர் உணவு நிவாரணத்திற்கான நிதியை சண்டிலிப்பாய் பிரதேச செயலாளரின் கோரிக்கைக்கு அமைய மேற்படி நிறுவனத்தால் வழங்கப்படவுள்ளதாக கியூடெக்-கரித்தாஸ் நிறுவன மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குநர் அருளானந்தம் தெரிவித்துள்ளார். (ச)

## மூன்றாம் தவணை விடுமுறைக்காக பாடசாலைகள் இன்று மூடப்படும்

நாட்டிலுள்ள சகல அரச பாடசாலைகளும் இவ்வாண்டில் 3ஆம் தவணை விடுமுறைக்காக இன்று மூடப்படுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இவ்வாண்டு 210 நாட்கள் பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டுமென தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் 196 நாட்கள் பாடசாலைகளை நடத்துவதற்கு கல்வி அமைச்சு அனுமதி வழங்கியிருந்தது.

இன்று மூடப்படும் பாடசாலைகள் புதிய கல்வியாண்டின் முதலாம் தவணைப் பாடசாலைக் கல்வி நடவடிக்கைகளுக்காக ஜனவரி மாதம் 2ஆம் திகதி திறக்கப்படுமென அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

2007ஆம் ஆண்டின் முதலாம் தவணைப்பாடசாலைக் காலமானது ஜனவரி 2ஆம் திகதி முதல் ஏப்ரல் 7ஆம் திகதி வரையிலானது என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

## கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் குடும்பப் பதிவு அட்டைகள் மீளாய்வு

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பின்வரும் கிராம அலுவலர் பிரிவுகளில் கீழ்க் காட்டப்பட்டுள்ள தினங்களில் அந்தந்த கிராம அலுவலர் அலுவலகங்களில் குடும்ப பதிவு அட்டைகள் மீளாய்வு செய்யப்படவுள் ளன.

பிரதேச செயலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் சமுகமளிக்கும் போது, அன்றைய தினம் குடும்ப அட்டையில் பதிவு செய்யப்பட்டுள்ள அங்கத்தவர் ஒருவர் அடையாள அட்டையுடன் கட்டாயம் சமுகமளித்தல் வேண்டும்.

மீளாய்வுக்கு உட்படுத்தப்படாத குடும்ப அட்டைகளுக்கு அடுத்த கட்டப் பொருட்கள் வழங்கப்பட மாட்டாது என கரவெட்டிப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகஸ்தர் த.பாலகிட்ணபிள்ளை அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 11ஆம் திகதி ஜே/355, ஜே/348 கிராம அலுவலர் பிரிவிலும்

12ஆம் திகதி ஜே/374, ஜே/356 கிராம அலுவலர் பிரிவிலும் மீளாய்வு இடம்பெறவுள்ளது. 14ஆம் திகதி ஜே/365, ஜே/370, ஜே/363 ஆகிய பிரிவுகளிலும்

15ஆம் திகதி ஜே/371, ஜே/349, ஜே/353 ஆகிய பிரிவுகளிலும் 16ஆம் திகதி ஜே/349, ஜே/360 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளிலும் மீளாய்வு இடம்பெறவுள்ளதாக அவர் அறிவித்துள்ளார். (ச)

## யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் அத்தியாவசியப் பொருட்களுக்கு நிலவும் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் நோக்குடன் இன்று காலை 9.30 மணிக்கு யாழ்.பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக பொது மக்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் அத்தியாவசிய பொருட்கள் கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்யப்படவுள்ளதாக யாழ்.பொலிஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஒவ்வொருவருக்கும் 5 கிலோ அரிசி, இரண்டரைக் கிலோ மா, ஒரு கிலோ பருப்பு ஆகிய பொருட்கள் அடங்கிய பொதிகளும், தேங்காய் பால்மா, அங்கர், நெஸ்பிறே, ரின்மீன், தீப்பெட்டி, பிஸ்கட் ஆகியனவும் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-133)

## பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலைகளில் நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவிருந்த சைவநெறி பாடசெயலமர்வு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (ச)

## தேங்காயெண்ணை திருட்டு

ஆலயப் பாவனைக்கென ஆலய களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த 22 லீற்றர் தேங்காயெண்ணை இரவு நேரம் களஞ்சியம் உடைக்கப்பட்டு திருடப்பட்டுள்ள தாகப் புகார் செய்யப்பட்டுள்ளது. பருத்தித் துறை திக்கமுனை நாச்சிமார் கோவிலி லேயே இத்திருட்டு இடம் பெற்றுள்ளது. (ச-52)

## ‘புழுங்கல் அரிசி’ பெண்கள் களம்

செயல்திறன் அரங்க இயக்கமும் எஸ்.ஜி.பி.வி வேலைக் குழுவும் இணைந்து நடத்தும் ‘புழுங்கல் அரிசி’ எனும் பெண்கள் ஒன்று கூடிக் கலந்துரையாடும் களம் நிகழ்ச்சி எதிர்வரும் 11ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்.நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (ச)

நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குறைத்
துன்பங்கள் சென்று படும்

-திருக்குறள்

வலம்புரி

# எதியோப்பியாவாக மாறும் யாழ்.குடாநாடு

யாழ்.குடாநாட்டையும் வெளிமாவட்டங்களையும் இணைக்கும் ஏ-9 பாதை மூடப்பட்டதனால் குடாநாட்டு மக்கள் பெரும் துன்ப துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

பொருட்களின் தட்டுப்பாடு,மிக உயர்ந்த விலை என்பவற்றினால் மக்களின் ஜீவனோபாயம் கேள்விக்குறியாகி விட்டது.

மூன்று மாதங்கள் கடந்த நிலையில் இப்போது மக்களின் போசாக்கு நிலை அபாய கட்டத்தை நெருங்கி விட்டது.

கடற்தொழிலுக்கு விதிக்கப்பட்ட தடையினால் கடலுணவின் விலை ஒரு காலத்தில் நிலவிய யாழ்ப்பாணத்துக் காணிகளின் விலைகளாகவுள்ளது.

ஏழைகள்,நடுத்தர வர்க்கத்தினர் கடலுணவை நினைத்தும் பார்க்க முடியாத அளவிற்கு மீனின் விலை பன்மடங்கு அதிகரித்து விட்டது.

கூடவே கோழி முட்டைகளின் கிடைப்பனவும் அவற்றின் விலையும் போதும் என்ற வெறுப்புணர்வைத் தோற்றுவித்து விட்டன.

கோழித் தீவனம் மற்றும் கால்நடைத் தீவனங்களுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டினால் பால், முட்டை போன்ற போசாக்குணவைப் பெறமுடியாமல் யாழ்.குடாநாட்டு மக்கள் உள்ளனர்.

ஏ-9 பாதை மூடப்பட்டதனால் ஏற்பட்ட உணவுத் தட்டுப்பாடு, போசாக்கின்மை என்பவற்றினூடே தற்போது யாழ்.குடாநாட்டு மக்களை உலுப்பி வரும் சிக்குன்குனியா காய்ச்சல் மனித வாழ்வையே வெறுக்க வைப்பதாகும்.

போசாக்கின்மை இருக்கின்றபோது காய்ச்சலும் ஏற்படுமாயின் அது மரணத்தை ஏற்படுத்தும் அபாயமுடையதென்பதை மருத்துவ சமூகம் ஏற்றுக் கொள்ளும்.

இவ்வகையில் யாழ்.குடாநாட்டு மக்கள் அனைவருமே மரணத்தின் பிடியில் சிக்குண்டுள்ளனர் என்பது மறுக்க முடியாத உண்மை.

சிக்குன்குனியா காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்களின் ஆரோக்கியத்தைப் பேணுவதற்கு எதுவுமே இல்லை என்ற நிலையில் அவர்களின் உடல் நிலை மிகமோசமாகி விடுகின்றது.

சுருங்கக் கூறின் எதியோப்பிய மக்களின் தோற்றத்திற்கு குடாநாட்டு மக்கள் முன்னோக்கி வருகின்றனர்.

இந்தப் பரிதாபத்தைத் தடுக்க மக்களை மரணப் பிடியிலிருந்து மீட்டெடுக்க ஐ.நா அமைப்பு முன்வர வேண்டுமென்பது மனித நேயத்தால் விடப்படும் கோரிக்கையாகும்.

# சோதனையில் ஏற்பட்ட தாமதம் இருவாரத்தில் மூவர் உயிரிழப்பு

## வாகரையில் சம்பவம்

(மட்டக்களப்பு)

வாகரையிலிருந்து மட்டக்களப்பிற்கான போக்குவரத்துப் பாதையில் தாமதம் ஏற்படுத்தப்பட்டு வருவதால் நோயாளர்கள் மூவர் கடந்த இரு வாரங்களில் உயிரிழந்துள்ளனர். குழந்தைகள் உட்பட மூவர் ஆபத்தான நிலையிலுள்ளனர் என மட்டக்களப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

படையினரின் தாக்குதல் நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்து அப்பகுதியில் வாழ்ந்து வருகின்ற மக்கள் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதில் தொடர்ந்தும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்நிலையில் வாகரை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நோயாளர்கள் மூவர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட வேண்டிய நிலை ஏற்பட்ட போதும் படையினரின் அனுமதிக் கெடுபிடி காரணமாக மூவரும் உயிரிழந்தனர்.

இதன் தொடராக அம் மருத்துவமனையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பிற்கு கொண்டு செல்லப்பட வேண்டிய நோயாளர்கள் நால்வர் இருப்பதாகவும் அவர்களுக்கு அனுமதி வழங்குமாறும் படைத் தரப்பினரிடம் கோரிக்கை விடப்பட்டது.

இருப்பினும் நேற்றுவரை படையினரால் அனுமதி வழங்கப்படவில்லை.

ஒன்றரை வயதுடைய எஸ்.ஜோன்சன், ஏழுவயதுடைய எஸ்.ரதீஸ்வரன் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களான கே.கௌரிமலர், வி.லுகேந்திரா ஆகியோரே வாகரை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் குழந்தை உட்பட மூவர் ஆபத்தான நிலையில் இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (சு)

# இந்திய அரசு தலையிடாமல் இலங்கைப் பிரச்சினை தீராது

## -ரவிசங்கர் வலியுறுத்தல்

(சென்னை)

இலங்கையில் தமிழ் மக்கள் கண்ணீர் சிந்தும் போது நம்கண்டு கொள்ளாமல் இருக்கக் கூடாது. இலங்கை பிரச்சினையில் இந்தியாவின் மௌனம் கலைய வேண்டும் என்று வாழும் கலை இயக்க நிறுவனர் ரவிசங்கர் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும்கூறியதாவது;

இலங்கை பிரச்சினையில் இந்தியா தலையிடாமல் விட்டு விட்டது. உலகத்தில் உள்ள உயிர்கள் அனைத்தும் ஒன்று. உலகத்தில் மக்கள் எங்கு துன்பப்பட்டாலும் நாம் அதில் பங்கு கொள்ள வேண்டும். ஈராக் நாட்டில் நடக்கும் போரில் ஏழு லட்சம் பெண்கள் கணவனை இழந்துள்ளனர்.

நம் நாடு இலங்கை பிரச்சினையில் தலையிட்டு இருந்தால் எவ்வளவோ பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டு இருக்கும். இலங்கை பிரச்சினையில்இந்திய நாடு தலையிட வேண்டும் என்று இலங்கை அரசும் விரும்புகின்றது. விடுதலைப் புலிகளும் விரும்புகின்றனர். ஆனால் இந்த பிரச்சினையில் இந்திய நாடு தலையிடாமல் மௌனமாக உள்ளது.

உலகத்துக்கே வழிகாட்டும் ஆன்மீக அறிவு இந்தியாவில் தான் இருக்கின்றது. ஆயுதங்களால் எதையும் சாதிக்க முடியாது.ஈராக்கில் என்ன சாதிக்க முடிந்தது? இந்தியாவால் தான் சமாதானத்தை பிற நாடுகளில் ஏற்படுத்த முடியும். ஆப்கானிஸ்தானில் இந்தியர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

எனினும் அந்நாட்டுக்கு இந்தியா ரூபா 35ஆயிரம்கோடி உதவி வழங்கியுள்ளது. ஆனால் இலங்கையில் தமிழ் மக்கள் கண்ணீர் சிந்தும்போது நாம் கண்டு கொள்ளாமல் இருக்கக் கூடாது. அந்த மக்களுக்கு இந்திய அரசு ஏதேனும் வகையில் உதவ வேண்டும் என்றார். (எ-5)

# மதரீதியான பிணக்கினால் காத்தான்குடியில் பதற்றம்

காத்தான்குடிப் பிரதேசத்தில் நேற்று பெரும் பதற்ற நிலை தோன்றியுள்ளது. அப்பிரதேசத்தில் பெரும் ஆர்ப்பாட்டங்களும் வன்முறைகளும் இடம்பெற்றுள்ளதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முஸ்லிம்நபர் ஒருவர் இறந்ததையிட்டு அவரது ஜனாஸாவை காத்தான்குடியில் அடக்கம் செய்ய முற்பட்ட போதே இந்த முறுகல்நிலை தோன்றியதாக தெரிய வருகின்றது.

குறிப்பிட்ட நபர் கடந்த காலங்களில் முஸ்லிமாக இருந்து கொண்டு முஸ்லிம் மதத்தினை அவமதிக்கும் வகையில் நடந்து கொண்டிருந்தார் எனத் தெரிவித்த இப் பிரதேச மக்கள் அவருடைய ஜனாஸாவை இந்தப் பிரதேசத்தில் அடக்கம் செய்ய அனுமதிக்க முடியாது எனத் தெரிவித்த போதே இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றதாக தெரிவிக்கப் பட்டது.

இறந்தவரான அப்துல்லாஹ் பயில்வான் என்பவர் மருதமுனையினைச் சேர்ந்தவர் என்றும் அதேநேரம் காத்தான் குடியில் முஸ்லிம் மக்களை இழிவுபடுத்தும் வண்ணமே அவரது கடந்தகால நடவடிக்கைகள் அமைந்தன என்றும் காத்தான்குடி இளைஞர்கள் தெரிவித்துள்ளனர். (சு)

# புதிய தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்த தபால்,தொலைத்தொடர்பு அமைச்சு திட்டம்

(கொழும்பு)

தபால்துறையில் புதிய தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்த தபால் தொலைத்தொடர்புகள் அமைச்சு திட்டமிட்டுள்ளது.

ஜப்பான் மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளின் தனியார் நிறுவனங்களின் தொழில்நுட்ப உதவியுடன் தபாற் சேவையை விரைவாகவும், அதேவேளை திறமை மிக்கதாகவும் செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக தபாலக தலைமைக் காரியாலய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் தபாற் சேவை தரமுயர்த்தப்படுவதோடு கடித விநியோகம், தந்தி மற்றும் காசுக் கட்டளைச் சேவைகளும் விரைவு படுத்தப்படுமென அவர் குறிப்பிட்டார்.

நாடளாவிய ரீதியில் ஏறக்குறைய 547 பிரதான தபாலகங்களும் 3 ஆயிரத்து 400 உப தபாலகங்களும் உள்ளன. இவற்றில் 20 சதவீதமான தபாலகங்களே இலாபகரமாக இயங்குவதாக அவர் தெரிவித்தார்.

தபால் துறையில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக அடுத்த ஆண்டில் 1507 பேரை புதிதாகச் சேர்த்துக் கொள்ள அமைச்சு உத்தேசித்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (சு-5)

# தமிழர் தாயகப் பகுதிகளில் மனித உரிமைகளே இருக்காது

## -சிறிகாந்தா எம்.பி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

"பயங்கரவாத தடைச் சட்டத்தை முழு மூச்சுடன் அமுல் செய்வது என்று அரசு முடிவு செய்துள்ளது இதனால் இனி தமிழர்களுக்கு எந்தவித மனித உரிமைகளும் இருக்காது" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிறிகாந்தா அச்சம் தெரிவித்தார்.

கடந்த காலத்தில் அவசரகால நிலை அமுலில் இருந்த போதும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளின் போதும் பொலிஸாரும், இராணுவத்தினரும் நடந்து கொண்ட விதத்திலிருந்து கிடைத்த அனுபவத்தில் தாம் அச்சம் அடைவதாக அவர் கூறினார்.

பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்தவர் அல்லது அந்த அமைப்புக்குத் துணை போகின்றவர் என்ற சந்தேகம் வந்தாலே யாரையும் விசாரணைக்கு அழைத்துச் செல்லவும், கைது செய்யவும் இச் சட்டம் வழி செய்கிறது.

கைது செய்யப்பட்டவர் பற்றி அவருடைய உறவினர்களுக்கோ, நண்பர்களுக்கோ தகவல் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. கைது செய்வதற்கோ, வீடு அல்லது அலுவலகத்தில் புகுந்து சோதனை செய்வதற்கோ முன்அனுமதி தேவை யில்லை.

பயங்கரவாதத்துக்குத் துணை போவதாக சந்தேகம் வந்தால் அப்படி சந்தேகிக்கப்படுகிறவர் சிறிய குற்றம் செய்திருந்தாலும் அவருக்கு கடும் தண்டனை அளிக்கலாம். அதிக பட்சம் 20 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கலாம்.

பயங்கரவாத ஒழிப்பு என்ற போர்வையில் தமிழர்களை கேள்வியின்றி கைது செய்ய இச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது என்று தெரிவித்தார் சிறிகாந்தா. (சு-5)

# அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகள் உடனடியாகக் குறைப்பு!

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பத்து அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகளைக் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அரிசி, கிழங்கு, வெங்காயம், மா , பால் மா , பருப்பு, ரின் மீன், சீனி,கருவாடு, நெத்தலிக் கருவாடு ஆகியவற்றின் விலைகளே குறைக்கப்பட்டுள்ளன.

நேற்று நள்ளிரவு முதல் இந்த விலை குறைப்பு அமுலுக்கு வந்துள்ளதாகவும் இலங்கையின் சகல பாகங்களிலும் உள்ள கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களில் பொதுமக்கள் இவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் தலைவர் நளின் பெர்னாந்து தெரிவித்துள்ளார்.

நத்தார் மற்றும் புதுவருடப் பண்டிகைக் காலம் ஆரம்பித்துள்ளதால் இந்த அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலை குறைப்புப் பொதுமக்களின் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெறும் என எதிர்பார்க்கப் படுகின்றது. (ச)

# புங்குடுதீவைச் சேர்ந்த மூவர் கிளைமோர் தாக்குதலில் பலி

## சடலங்கள் அடையாளம் காணப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ்.பண்ணை கொட்டடி மீன் சந்தைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் கொல்லப்பட்ட சிறுமி உட்பட நால்வரின் சடலங்களும் உறவினர்களால் அடையாளம் காட்டப்பட்டுள்ளது.

கொல்லப்பட்டவர்களில் புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தில் வசிக்கும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தம்பையா தெய்வேந்திரன்(வயது-48) அவரது மனைவி பவளமணி (வயது-46) அவர்களது பேர்த்தி நந்தகுமார் பிரசாந்தி (வயது- 4)ஆகியோரும் மற்றையவர் சண்டிலிப்பாய் ஐந்திரானைச் சேர்ந்த செல்லையா ரகுநா தன் (வயது -50) என்ற யாழ்.ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள ஹாட்வெயார் ஒன்றின் உரிமையாளராவார்.

இவர்களின் சடலங்களை பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு யாழ்.பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-5)

# ‘இஸட்’ வெட்டுப்புள்ளி அடுத்த மாத முற்பகுதியில்

(கொழும்பு)

2006/2007 ஆம் கல்வியாண்டின் பல்கலைக்கழக மாணவர் அனுமதிக்கான ‘இஸட்’ வெட்டுப் புள்ளிகளை அடுத்த மாத முற்பகுதியில் வெளியிட உத்தேசித்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்தார்.

இவ்வாண்டு நடைபெற்ற க.பொ.த.உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளின் மீளாய்வுகள் பரீட்சைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பரீட்சைத் திணைக்களத்திலிருந்து உத்தியோகபூர்வ பெறுபேறுகள் கிடைக்கப் பெற்றதுடன் நாடளாவிய திறமை மற்றும் மாவட்ட அடிப்படையில் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான ‘இஸட்’ புள்ளிகளை வெளியிட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு அதற்கான விண்ணப்ப முடிபுத்திகதி கடந்த ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதி முடிபடைந்த நிலையில் 40 ஆயிரம் விண்ணப்பங்கள் ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார். (ச)

# ஆட்லறித் தாக்குதலில் 10 மாணவர்கள் படுகாயம்

(திருகோணமலை)

விடுதலைப்புலிகள் நேற்று முற்பகல் 12 மணியளவில் திருகோணமலை கல்லாறுப் பகுதியில் மேற்கொண்ட ஆட்லறி ஷெல் தாக்குதலில் கல்லாறு சோமாதேவி வித்தியாலயத்தைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவரும் 10 மாணவர்களும் காயமடைந்துள்ளதாகத் தேசியப் பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் செய்தி வெளியிட்டுள்ளது.

பாடசாலையில் கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தவேளை விடுதலைப்புலிகள் மேற்கொண்ட ஆட்லறித் தாக்குதலில் பாடசாலை கட்டடத் தொகுதி மீது ஷெல் விழுந்துள்ளது.

காயமடைந்த ஆசிரியரும் மாணவர்களும் கந்தளாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுள் இரு மாணவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்ததாக தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் மேலும் செய்தி வெளியிட்டுள்ளது.

காயமடைந்த மாணவர்கள் அனைவரும் 15-16 வயதுக்குட்டவர்கள். பாடசாலைக்கு அருகில் இராணுவ முகாமோ இராணுவமோ இல்லை. விடுதலைப்புலிகள் குறித்த பகுதியிலிருந்து பொதுமக்களை வெளியேற்ற இத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர் என இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க ரொய்ட்டருக்குத் தெரிவித்துள்ளார்.

ஏனினும் விடுதலைப்புலிகள் இதனை மறுத்துள்ளனர். (ச-7)

# கடத்தல் சம்பவம் அதிகரிப்பு

யாழ்ப்பாணத்தில் கடந்தசில நாட்களாக 9 பேர் இனந்தெரியாதோரால் வெள்ளை வானில் கடத்தப்பட்டுள்ளதாக யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாத்திரம் ஆறுபேர் கடத்தப்பட்டுள்ளனர். கல்வியங்காடு, பண்டத்தரிப்பு, கொக்குவில் பகுதியிலேயே இக் கடத்தல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இது குறித்து உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முறையிடப்பட்டுள்ளது.

கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக இராணுவத் தரப்பினரிடம் முறையிட்டபோது அது குறித்து தமக்கு எதுவும் தெரியவில்லை என அவர்கள் கூறியதாக அம் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-7)

# போர் நிறுத்த...

அவசரகாலச் சட்டத்தை மாற்றியமைக்கலாம் என்றும்தெரிவித்துள் ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் 2002 ஆம் ஆண்டு அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கைச்சாத்தாகியுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையில் எட்டப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தின் சரத்துக்களை மீறுவதாக தோன்றுகின்ற போதிலும் இந்தச் சட்டம் குறித்த மேலதிக விபரங்களை பெறும் நோக்கில் அரசு தரப்புடன் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளதாக இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

இந்தச் சட்டத்தின் மீள அமுலாக்கம் போர்நிறுத்த மீறலா? இல்லையா? என அறிக்கையிட அல்லது கருத்துக் கூற இன்னும் சிறிது காலம் அவகாசம் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்குத் தேவை என கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தொபினூர் ஓமர்சன் தெரிவித்துள்ளார். (ச-5)

# கடற்படையினர்...

இத் துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு இளைஞர்கள் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொல்லப்பட்ட வினோத் (வயது-27) எனவும் காயமடைந்தவர் சுதர்ஷன் (வயது-28) எனவும் பொலிஸார் தெரிவித்தனர். இவர்கள் மோதரை வீதியில் பூமாலை வியாபாரம் செய்பவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-7)

# பயங்கரவாதத் தடைச் சட்டம் குறித்து...

ந்தது. படையினர், அப்பாவி மக்கள் பலர் கொல்லப்பட்டனர். அப்படியிருந்தும் விடுதலைப்புலிகளுக்கு ஜெனீவாப் பேச்சுவார்த்தைகளுக்குச் சந்தர்ப்பம் வழங்கினோம்.

ஆனால் விடுதலைப்புலிகள் அப் பேச்சுவார்த்தைகளை முறியடித்துக் கொண்டு வெளியேறினார்கள். இந்நிலையில் இராணுவத் தளபதியை இராணுவத் தலைமையகத்துக்குள்ளேயே கொலை செய்ய விடுதலைப் புலிகள் முயற்சி செய்தனர்.தற்போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளரைக் கொலை செய்ய முயற்சித்தனர்.

இந்தச் சூழ்நிலையில் நாட்டின் ஜனாதிபதி என்ற ரீதியிலும் முப்படையின் தளபதி என்ற ரீதியிலும் அமைதியாக இருக்க முடியுமா? நாட்டையும் மக்களையும் காப்பது எனது கடமை.

எனவேதான் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அரசாங்கம் அமுலாக்கியது.போரினால் அரசாங்கத்தைப் பணியவைக்கும் விடுதலைப்புலிகளின் திட்டத்தை தோல்வியடையச் செய்வதே இதன் நோக்கமாகும் என்றார் ஜனாதிபதி.

விடுதலைப்புலிகளுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆதரிப்பதற்குச் சந்தர்ப்பத்தை வழங்கி விட்டு ஜனநாயகத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்க முடியாது எனத் தெரிவித்துள்ள மகிந்த,

பயங்கரவாதிகளுக்கு ஆதரவு வழங்குபவர்கள் எவராகவிருந்தாலும் அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கூறினார்.

அமெரிக்கா உட்பட பல நாடுகளில் பயங்கரவாதப் பிரச்சினைகள் உள்ளன. அங்கு ஜனநாயகத்தைப் பயங்கரவாதத்துடன் இணைத்துப் பார்ப்பதில்லை. எனவே பயங்கரவாதத்தைத் தோல்வியடையச் செய்வதை விட வேறு வழியில்லை.

அதிலிருந்து பின்நோக்கிச் செல்வது என்பது நாட்டையும் மக்களையும் பயங்கரமான ஆபத்துக்குள் தள்ளிவிடும் நிலைமையாகும். அந்தத் தவறை செய்ய நான் தயாரில்லை.

பயங்கரவாதத்தைத் தோல்வியடைச் செய்வதன் மூலமே புதிய இலங்கையைக் கட்டி எழுப்ப முடியும். அதேவேளை நாட்டின் அபிவிருத்தியை பயங்கரவாதத்துக்காக கைவிடவும் தயாரில்லை.

இச் சட்ட அமுலாக்கத்தால் நாட்டில் நிலவும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கான முயற்சிகள் தடைப்படாது. அனைத்துக் கட்சிகளின் ஆலோசனைக் குழு இது குறித்து ஆய்வுகளையும் பரிந்துரைகளையும் தயாரித்துக் கொண்டுள்ளது. அது மிக விரைவில் உங்கள் முன்வைக்கப் படும்.

புதிய சட்ட திட்டங்கள் அமுலாக்கம் விடுதலைப்புலிகளை சட்ட ரீதியான ஜனநாயக நீரோட்டத்துக்குள் கொண்டு வரும்என நம்புகின்றேன். அதற்காக அனைத்துச் சர்வதேச அமைப்புக்களும் செயற்படும்என நான் நம்புகின்றேன் என்றார் மகிந்த. (ச-5)

# கொழும்பில் இடம்பெற்ற...

இவர்கள் கூறும் குற்றச்சாட்டுக்கள் உண்மையானவையல்ல. ஏனெனில் இவர்கள் இப் பகுதிக்கு கண்காணிப்பாளரை அனுமதிப்பதில்லை.

அத்தோடு இராணுவப் பகுதியில் இடம் பெறும் அசம்பாவிதங்களுக்கு இராணுவத்தினர் எங்களையே குற்றம் சாட்டுகின்றனர். திருகோணமலையில் இடம்பெற்ற தாக்குதலை நாங்கள் செய்யவில்லை. நாங்கள் குறிதவறி தாக்குதலை நடத்துவதுமில்லை என்று கூறினார்.

இலங்கை அரசாங்கம் தங்களையும் குழப்பி சர்வதேச சமூகத்தையும் குழப்பி எங்களையும்குழப்பிக் கொண்டிருக்கின்றது. சமாதானமா? யுத்தமா? என உறுதியான தீர்வை அரசாங்கம் எடுக்க வேண்டும். அதோடு அதைத் தெளிவாக அனைவருக்கும் அறிவிக்க வேண்டும்.

அதேவேளை அரசாங்கம் சமாதானக் கதவுகள் திறந்தேயிருக்கின்றது என கூறுகின்றது.

ஆனால் இதனால் தமிழர்களுக்கு எந்த விதத் தீர்வும் கிடைக்கவில்லை என்பதே எனது கருத்து என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்துள்ளார். (ச-7)

# மட்டு.வாகரை...

பகுதியை நோக்கி இராணுவம் ஐந்து கிலோ மீற்றர் தூரம் முன்னேறியுள்ளது.

இதற்கிடையில் ஈச்சிலம்பற்றிலும் விடுதலைப்புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் கடும் மோதல் நடைபெற்றதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

படையினர் தங்கள் நிலையிலிருந்து எறிகணைத் தாக்குதலை நடத்தினர் என்று விடுதலைப்புலிகளின் இராணுவப் பேச்சாளர் இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் திருகோணமலையில் மகிந்தபுரத்துக்குஅருகிலுள்ள கல்லாறு பகுதியில் பாடசாலை ஒன்றில் கடந்த புதன்கிழமை விடுதலைப்புலிகள் நடத்திய எறிகணைத் தாக்குதலில் பத்து வயதுச் சிறுமி உட்பட 3 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். 10 மாணவர்கள் காயமடைந்துள்ளனர் என இராணுவம் தெரிவித்துள்ளது. காயமடைந்த மாணவர்கள் 15-16 வயதுக்குட்பட்டவர்கள் எனவும் இராணுவத் தகவல் தெரிவித்துள்ளது.

ஆனால் இத் தாக்குதலை தாங்கள் நடத்தவில்லை என்று விடுதலைப்புலிகள் மறுத்துள்ளனர். (ச-5)

# இந்தியாவின் தலையீட்டை வலியுறுத்தி...

இலங்கைப் பிரச்சினையை இந்தியா தீர்க்க வேண்டும்என்றுவலியுறுத்தி தமிழ்நாடு சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் தமிழ் நாடு முதலமைச்சர் கருணாநிதி பதிலளித்து உரையாற்றிய போது தெரிவித்துள்ளதாவது;

ஒவ்வொரு கட்சி உறுப்பினர்களும் தங்களது உணர்வு பூர்வமான கருத்துக்களை இங்கு தெரிவித்தனர். இந்தப் பிரச்சினை குறித்து நானும் ஏற்கனவே பேசியிருக்கின்றேன். அதையே சொல்லி பிரச்சினையை தட்டிக் கழிக்க நான் விரும்பவில்லை.

தமிழக மக்களின் உணர்வு எப்படி எல்லாம் கடந்த சில நாட்களாக வெளிப்படுத்தப் படுகின்றது என்பதை நானும் புதுடில்லி சென்ற போது சோனியா காந்தியிடம் எடுத்துக் கூறியிருக்கின்றேன்.

இப்போது வாய்ப்பு ஏற்பட்டாலும் புதுடில்லி சென்று எடுத்துக் கூற கடமைப்பட்டிருக்கின்றேன். பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் மணியானாலும் மருத்துவர் இராமதாஸ் ஆனாலும் இலங்கைப்பிரச்சினையை என்னால்தான் தீர்க்க முடியும் என்று கூறும் போது முதலமைச்சர் பதவியில் இருப்பதால் என்னால் தீர்க்க முடியும் என்று கருதுகின்றார்களா? அல்லதுகருணாநிதியால் முடியும் என்று கருதுகின்றார்களா? என்று தெரியவில்லை.

இலங்கைப் பிரச்சினை எமது உணர்வோடு உயிர் மூச்சோடு கலந்தது. எனவே தனியாகத் தீர்மானம் போட்டு மத்தியரசுக்கு நெருக்கடி கொடுக்க வேண்டாம். நாமும் நெருக்கடிக்கு ஆளாகத் தேவையில்லை. தீர்மானத்தை ஒரு வாசகமாக வாசிக்கின்றேன்.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு பாதுகாப்பில்லாத சூழ்நிலையுள்ளது. அங்கு நிலைமை மேலும் மோசமாகின்றது. இது குறித்து ஆழ்ந்த வேதனையை சபை தெரிவித்துக் கொள்கின்றது.

பிரச்சினைக்கு விரைவில் ஒரு முடிபு காண மத்திய அரசு உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இந்தத் தீர்மானம் அனைவருக்கும் பொதுவான தீர்மானமாகக் கருதி நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்கின்றேன் என்றார் அவர். கருணாநிதியின் உரையைத் தொடர்ந்து சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.8 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.12.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.